2010 ஏப்ரல் 15]
45—

குடமுழுக்கு

***96892—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கீராலத்தூர் ஊராட்சி, திருக்கொள்ளிக்காடு அருள்மிகு பொங்கு சனீஸ்வரன் திருக்கோயிலுக்கு குடமுழுக்குச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், திருக்கொள்ளிக்காடு அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில் (பொங்கு சனீஸ்வரர் திருக்கோயில்) இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு கடந்த 11-7-1997 அன்று குடமுழுக்கு நடைபெற்று, 12 ஆண்டுகள் முடிவுறுவதையொட்டி திருப்பணிகள் மீண்டும் செய்திடத் திட்டமிடப்பட்டு 21 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்குப் பணிகள் செய்திட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, அங்கீகாரம் வழங்கப்பெற்று பணிகள் நடைபெறுகின்றன. விரைந்து பணிகளை முடித்து இவ்வாண்டு இறுதிக்குள் குடமுழுக்கு நடத்திட திருக்கோயில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கீராலத்தூர் ஊராட்சி, திருக்கொள்ளிக்காடு கிராமத்தில் உள்ள அருள்மிகு பொங்கு சனீஸ்வரன் திருக்கோயில் ஒரு சிறிய கோயிலாக இருக்கிறது. ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள்மூலம் பல்வேறு மாநிலங்களிலிருந்து மக்கள் வந்து செல்கின்றார்கள். குறிப்பாக, திருநள்ளாறு அருள்மிகு

சனீஸ்வரன் திருக்கோயிலுக்கு வரக்கூடியவர்கள், திருவாரூரிலுள்ள அருள்மிகு பொங்கு சனீஸ்வரன் கோயிலுக்கு வந்து வணங்கிச் செல்கின்றார்கள். அங்கே எந்தவித வசதியும் இல்லாத காரணத்தினாலே திருவாரூரில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தத் திருக்கோயிலுக்கு அருகில் கோயிலுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. ஆகவே, அங்கே தங்கும் விடுதி வசதி செய்து கொடுக்கவும், குடிநீர் உள்ளிட்ட வசதிகள் இல்லாத சூழல் இருப்பதால், அந்த வசதிகளையும் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய இந்த வினாவில், திருப்பணிகள் செய்ய வேண்டும் என்றும், தொடர்ந்து அங்கே சில அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார்கள். அது, நியாயமான கோரிக்கை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், திருக்கோயில்களுக்குத் திருப்பணிகளைச் செய்வது மட்டுமல்ல, அந்தத் திருக்கோயில்களைத் தூய்மையாக வைக்கவும், அதேநேரத்தில் அங்கு வந்து செல்லக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான தங்குமிடம், குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளைத் தொய்வின்றிச் செய்திட வேண்டுமென்றும் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அறிவுரையை ஏற்று, வரக்கூடிய பக்தர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து தருவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, நூற்றுக்கணக்கானோர் வந்து செல்லக்கூடிய திருக்கோயிலாக, வளர்ந்து வருகின்ற திருக்கோயிலாக இது இருக்கின்ற காரணத்தாலே இந்தத் துறைக்கு உறுதுணையாக, மாவட்ட நிர்வாகத்திடமும், சுற்றுலாத் துறையிடமும் நிதி உதவிகளைக் கோரியிருக்கிறோம். அதற்கான பரிந்துரைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதிலே தங்கும் விடுதியும் மற்றும் சில வசதிகளும் செய்துதரக் கோரப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, தேவையான அடிப்படை வசதிகளை விரைந்து செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்தில் இருக்கக்கூடிய அருள்மிகு ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான குளம் திருத்துறைப்பூண்டி நகராட்சி அலுவலகத்திற்கு எதிர்ப்புறம் இருக்கிறது. அந்தக் குளத்திற்குத் தண்ணீர் வரக்கூடிய வாய்க்கால்கள் தூர்க்கப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, ஆறுகளிலிருந்து அந்தக் குளத்திற்குத் தண்ணீர் வரக்கூடிய வாய்ப்பு இல்லாத காரணத்தினாலே, அந்த நகராட்சி அலுவலகத்திற்கு எதிர்ப்புறம் இருக்கக்கூடிய அந்தக் குளம் சுற்றுச்சூழலை மாசுபடுத்தக்கூடிய நிலையில் இருக்கிறது. ஆகவே, அந்தக் குளத்தை நகராட்சிக்குப் பரிவர்த்தனை செய்து கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். கடந்தகாலத்தில் நம்முடைய முன்னாள் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள்கூட, அந்தக் குளம் தேவையற்றதாக இருக்கிறது, அங்கே கட்டடம் கட்ட வேண்டுமென்று அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அந்தக் குளத்தை நகராட்சிக்கு ஒப்படைத்து, அந்தப் பணிகளைச் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே இதற்காக தனிக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்கு அந்த நேரத்திலே பதிலும் அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, பரிவர்த்தனை செய்து வழங்குவதைப் பொறுத்தவரை நகராட்சி நிர்வாகத்திடம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி, இரு துறைகளைச் சார்ந்த அலுவலர்களும் அமர்ந்து பேசி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.